# கரூர் மாநகராட்சி

**2023ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## பொருள்கள்

**1)** கரூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளை 220 தூய்மை பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.KDIS/6093/P3/2018 நாள்.04.12.2018–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் 21.11.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Black Cat Solution, சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.1987 நாள்.06.01.2020–ல் அனுமதி வழங்கப்பட்டு 04.02.2020–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் வேலை உத்திரவு நீட்டிப்பு செய்து பணி நடைபெற்று வருகிறது. கடந்த 01.01.2023 முதல் 31.03.2023 மூன்று மாத காலத்திற்கு மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று 21.12.2022ல் வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்தற்கு மாமன்ற தீர்மான எண்.920, நாள்.28.02.2023ல் அனுமதிக்கப்பட்டு தற்போது மேற்படி பணியானது 31.03.2023–ல் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் மேற்படி பணிக்கு 24.03.2023ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது இதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கூர்ந்தாய்வு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதால் பொதுசுகாதாரப் பணி அத்தியாவசிய பணி என்பதாலும் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும், திடக்கழிவு மேலாண்மை விதி 2016–ன்படி திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் என பிரித்து வாங்கப்படும் பணிகள் பாதிக்கப்டும் என்பதால் பொதுசுகாதார பணிகளில் மிக அவசியமான துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்திரவினை. ஏற்கனவே பணியினை செய்து வரும் Black Cat Solution சென்னை நிறுவனத்தினருக்கே மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் செயல்முறைகள் Roc.No.E1/4822/2020 நாள்.05.06.2020ல் அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் 31.05.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் இரண்டு மாதத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.70,92,067/–ஐ செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.70,92,067/–ஐ மாநகராட்சி பொதுநிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணத்தில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (எச்1/3280/2018)

**தீர்மான எண்.1030** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2)** கரூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை 213 தூய்மை பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.22078/பி3/2016 நாள்.31.08.2016ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.202 நாள்.12.05.2017ல் அனுமதி பெறப்பட்டு 30.03.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. கடந்த 01.01.2023 முதல் 31.03.2023 மூன்று மாத காலத்திற்கு மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று 21.12.2022ல் வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்தற்கு மாமன்ற தீர்மான எண்.918, நாள்.28.02.2023ல் அனுமதிக்கப்பட்டுதற் போது மேற்படி பணியானது 31.03.2023–ல் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் மேற்படி பணிக்கு 24.03.2023ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது இதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கூர்ந்தாய்வு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதால் பொதுசுகாதாரப் பணி அத்தியாவசிய பணி என்பதாலும் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும், திடக்கழிவு மேலாண்மை விதி 2016–ன்படி திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் என பிரித்து வாங்கப்படும் பணிகள் முக்கியத்துவம் கருதியும், பொதுசுகாதார பணிகளில் மிக அவசியமான துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்திரவினை. ஏற்கனவே பணியினை செய்து வரும் M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்தினருக்கே மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் செயல்முறைகள்Roc.No.E1/4822/2020 நாள்.05.06.2020ல் அனுமதிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் 31.05.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் இரண்டு மாதத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.59,88,214/–ஐ செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.59,88,214/–ஐ மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (எச்1/9209/2016)

**தீர்மான எண்.1031** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**3)** கரூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை 190 தூய்மை பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.KDIS/6093/P3/2018 நாள்.07.04.2018–ன்படி ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் 26.06.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.1090 நாள்.10.09.2018ல் அனுமதி வழங்கப்பட்டு 30.09.2018–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் உத்திரவு நீட்டிப்பு செய்து பணி நடைபெற்று வருகிறது. கடந்த 01.01.2023 முதல் 31.03.2023 மூன்று மாத காலத்திற்கு மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று 21.12.2022ல் வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்தற்கு மாமன்ற தீர்மான எண்.919, நாள்.28.02.2023ல் அனுமதிக்கப்பட்டு தற்போது மேற்படி பணியானது 31.03.2023–ல் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் மேற்படி பணிக்கு 24.03.2023ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது இதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கூர்ந்தாய்வு செய்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதால் பொதுசுகாதாரப் பணி அத்தியாவசிய பணி என்பதாலும் பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும், திடக்கழிவு மேலாண்மை விதி 2016–ன்படி திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் என பிரித்து வாங்கப்படும் பணிகள் முக்கியத்துவம் கருதியும், பொதுசுகாதார பணிகளில் மிக அவசியமான துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்திரவினை. ஏற்கனவே பணியினை செய்து வரும் M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்தினருக்கே மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் செயல்முறைகள்Roc.No.E1/4822/2020 நாள்.05.06.2020ல் அனுமதிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் 31.05.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் இரண்டு மாதத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.53,41,600/–ஐ செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.53,41,600/–ஐ மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (எச்1/3280/2018)

**தீர்மான எண்.1032** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**4)** கரூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 48 வார்டுகளிலும் 67428 குடியிருப்புகள் உள்ளன, பருவ மழைகாலத்தினை முன்னிட்டு டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் ந.க.எண்.2571/2017/ஜே1, நாள்.23.04.2018—ன்படி 300 குடியிருப்புகளுக்கும் ஒரு கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் (DBC) 67428 குடியிருப்புகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் 225 கொசுப் புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) தற்காலிகமாக ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மான எண்.921 நாள்.28.02.2023—ல் மூன்று மாத காலத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில் 31.03.2023ல் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் தற்போது கொசுக்களினால் தொற்றுநோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை உள்ளதால், கொசுக்கள் மூலம் பரவும் நோயினால் பாதிப்பு அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால், தற்போது 48 வார்டுகளில் 73570 குடியிருப்புகள் உள்ளன, ஒவ்வொரு 300 குடியிருப்புக்களுக்கும் ஒரு கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் 73570 குடியிருப்புக்களுக்கு 245 கொசு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) தேவைப்படுகிறது, மேலும் கொரோனா தொற்று காலங்களிலும் மெகா தடுப்பூசி முகாம்கள் இதர மருத்துவ முகாம்கள் தொடந்து நடைபெற்று வருவதால் கணக்கெடுப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது, இந்நிலையில் தற்போது ஒப்பந்த காலத்தினை நீட்டித்து பொதுமக்களின் பொதுசுகாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கவும், பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி தேவையின் அடிப்படையில் DBC பணியாளர்களை ஏற்கனவே வழங்கி வரும் அவர்லேண்ட் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பி. லிட், சென்னை, நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த பணியினை ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தின்படியும் நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் 31.05.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு 225 ஒப்பந்த பணியாளர்களை கொண்டு கொசு ஒழிப்புபணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.43,23,375/—ஐமாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு இரண்டு மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.43,23,375/—ஐ மாநகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளமாமன்றம் அனுமதிக்கலாம். (8466/2017/எச்1)

**தீர்மான எண்.1033** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**5)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகளில் இருந்து உருவாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றி அவற்றை வைத்து வீட்டிலியே மாடித்தோட்டம் அமைத்தவர்களுக்கு பாராட்டு மற்றும் பரிசு வழங்கும் விழா ஹோட்டல் மெரிடியன், கரூர். 31.03.2023ம் தேதியன்று நடைபெற உள்ளது. இவ்விழாவில் கலந்து கொள்பவர்களுக்கு சிறப்பு பரிசுகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்குவதற்கும். மேலும் இதில் கலந்து கொண்டவர்களுக்கு தேனீர் மற்றும் உணவு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.75இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி உத்தேச செலவினத் தொகை ரூ.4.75இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (1389/2017/எச்1)

**தீர்மான எண்.1034** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**6)** கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்—3 வார்டு எண்.38 உள்ள திருப்பதி நகர் முதல் திண்ணப்பா நகர் வரை செல்லக் கூடிய சாலையின் மத்தியில் அமைந்துள்ள இரண்டு HT மின்கம்பங்களை வடபுறம் 10அடி துாரத்திற்கு இடம் மாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் தாந்தோணி அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற தொகை ரூ.2,88,100/—யை செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள மின்வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற தொகை ரூ.2,88,110/—யை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ3/1433/2022)

**தீர்மான எண்.1035** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**7)** திரு.இரா.வேலுசாமி, 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி கிராமம், காளியப்பனூர் விநாயகர் கோவிலிருந்து ஸ்ரீகார்டன் நகருக்கு செல்லும் மண்பாதை மாநகராட்சிப் பராமரிப்பில் உள்ளது. இதன் ஒருபகுதி மயானப் புறம்போக்கில் அமைகிறது. இச்சாலை நீண்ட காலமாக பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளதால் புழக்கத்தில் உள்ள சாலைப்பகுதியை மயானப் புறம்போக்கிலிருந்து சாலை புறம்போக்காக மாற்றம் செய்து தார்சாலை அமைத்து தருமாறு கோரியுள்ளார்கள்.

மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலையை காளியப்பனூர் மயானத்திற்கு செல்லும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஸ்ரீகார்டன் வரை செல்லும் பாதையாகும். இதன் மேற்கு பகுதி மாநகராட்சி மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை அமைக்க அரசாணை எண்.23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS & FC) துறை நாள்.01.12.2022—ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே சர்வே எண்.598/3, அரசு புறம்போக்கு மயானம் என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் 15மீட்டர் அகலத்தில் செல்லும் சாலையை மயானப் புறம்போக்கின் பகுதியில் இருந்து சாலை புறம்போக்காக மாற்றி உட்பிரிவு செய்ய மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி கிராமம், சர்வே எண்.598/3, அரசு புறம்போக்கு மயானம் என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் 15மீட்டர் அகலத்தில் செல்லும் சாலையை மயானப்புறம்போக்கின் பகுதியில் இருந்து சாலை புறம்போக்காக மாற்றி உட்பிரிவு செய்ய மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. இதனை மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களுக்கு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம். (எப்1/394/2023)

**தீர்மான எண்.1036** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**8)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்கன்குனியா மற்றும் இதர காய்ச்சல் வராமல் தடுக்கவும் மற்றும் எதிர்வரும் மழைகாலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசுப்புழு, முதிர் கொசுப்புழு மற்றும் சாக்கடை கால்வாய்களில் உருவாகும் கொசுக்கள் மற்றும் கொசுப்புழுக்களை அழிக்க பூச்சிக்கொல்லி மருந்துக்களான கீழ்க்கண்ட மருந்துகளை தமிழ்நாடு மருந்துகள் வாணிப கழகத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே 2023—2024ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தேவையானபொருட்களின் விவரம் | தேவையானஅளவு |
|---|---|---|
| 1 | பைரத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் | 300 லிட்டர் |
| 2 | டெமிபாஸ் | 300லிட்டர் |
| 3 | பேசிலஸ் துரிச்சியன்சிங் (BT Powder) | 300 கி.கி |

**அலுவலக குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட செலவினத் தொகை ரூ.9.90இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுதிக்கலாம். (எச்1/6417/2013)

**தீர்மான எண்.1037** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**9)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2ல் வார்டு எண்.20 முதல் 24 வரையுள்ள தெருக்களில் புதிய குடிநீர் இணைப்பு, புதை வடிகால் இணைப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்போது அப்பகுதியில் உள்ள சாலைகள் மழையால் பள்ளம் ஏற்பட்டு சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆதலால் மேற்படி பகுதிகளில் உள்ள சாலைகளை பேட்ச் ஒர்க் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10.00லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.10.00லட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2023)

**தீர்மான எண்.1038** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**10)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 ஜவஹர் பார்க் டேங்கில் உபயோகமற்ற வாகனங்கள் 11 எண்ணிக்கை மற்றும் 23 எண்ணிக்கை குடிநீர் உதிரி பாகங்கள், பெயர் பலகைகள், தற்காலிக கூடைகள், வாகனங்களின் டயர்கள், வாகனங்களின் உதிரி பாகங்கள் போன்றவற்றை பொதுஏலம் விடுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,40,000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2023)

**தீர்மான எண்.1039** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**11)** கரூர் மாநகராட்சி அலுவலகத்தில் தரைதளம், முதல் தளம், இரண்டாவது தளம் மற்றும் ஆணையர் அறை ஆகிய பகுதிகளில் உள்ள 6 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு சாதனத்தை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48,000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.48,000/–யை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/2023)

**தீர்மான எண்.1040** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**12)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துமனைக்கு கீழ்கண்ட பணிகளை நமக்கு நாமே திட்டத்தின் கீழ்மேற்கொள்வதற்கு நமக்கு நாமே திட்டம் அரசாணையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 1/3 பொதுமக்களின் பங்கு தொகை ரூ.6,46,898/– மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளதன்படி கீழ்கண்ட பணிகளுக்கு மொத்த மதிப்பீடு ரூ.19,40,694/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No | Description | Qty. Nos. | Unit Rate without GST in Rs. | GST@5% in Rs. | Total Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | Brain Stem Evoked Response Audiometry<br>Model: Neuro Audio<br>Make: Neurosoft LLC, Russia<br>(As per specification enclosed at Annexure) | 01 | 8,15,360 | 40,768 | 8,56,128 |
| 2. | Oto Acoustic Emission Machine<br>Model: Neuro Audio Screen (Audio Smart)<br>Make: Neurosoft LLC, Russia<br>(As per specification enclosed at Annexure) | 01 | 3,18,500 | 15,925 | 3,34,425 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | Impedance Audiometer<br>Model: Esipiro<br>Make: Horentek, Italy<br>(As per specification enclosed at Annexure-I) | 01 | 3,42,020 | 17,101 | 3,59,121 |
| 4. | Pure Tone Audiometer and Speech Audiometer<br>Model: Hekto (Tinnitus)<br>Make: Horentek, Italy<br>(As per specification enclosed at Annexure) | 01 | 3,72,400 | 18,620 | 3,91,020 |
| | | | 18,48,280 | 92,414 | 19,40,694 |
| (Rupees Nineteen Lakhs Forty Thousand Six Hundred and Ninety Four Only) | | | | | |

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8880/2022/பி1, நாள்:06.12.2022ல் தெரிவித்துள்ளபடி மேற்படி பணிக்கு இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் மாநகராட்சி செயற்பொறியாளர்(பொ) அவர்களின் குறிப்பில் Tamilnadu Medical Service Corporation Ltd தமிழக நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட M/s Medilife Technologies. New Delhi அவர்களின் மூலம் பணியினை மேற்கொள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கரூர் மாநகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேற்கண்ட பணிகளை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.19,40,694/—ல் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s Medilife Technologies. New Delhi அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/9004/2021)

**தீர்மான எண்.1041** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**13)** கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான ஈப்பு வாகன எண்: TN47 AB7476, (SCORPIO) வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பழுதுபணிகள் மேற்கொள்ளவும் முதுநிலை நகரமைப்பு அலுவலர் அவர்களின் அவசர பணிக்காக வாகனம் தேவை என்பதால் வாகனத்தின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தயாரிப்பு நிறுவனமான Mahindra & Mahindra நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையான Siva Auto Mobiles Pvt Ltd, Karur அவர்களிடம் நேரடியாக ரூ.16901/— மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான மேற்படி செலவினத் தொகை ரூ.16901/—க்கு மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ளும் போது கூடுதலாக ரூ.18041/— செலவினம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு கூடுதலாக ஏற்பட்டுள்ள செலவினத்திற்கு இம்மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள இம்மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.18041/—ஐ (பதினெட்டாயிரத்து நாற்பத்தி ஒன்று மட்டும்) மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ7/8978/2022)

**தீர்மான எண்.1042** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**14)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான TN47AL6711 (TATA ACE) வாகனத்திற்கு பழுதுபணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணையான Shri C.M Motors Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகைரூ.**14369/–**ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**15000/–** (பதினைந்தாயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின் கீழ்செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகைரூ.**15000/–** (பதினைந்தாயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)**வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
**4)**பொதுசுகதார பணியின் அவசர அவசியம் கருதி வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணை Shri C.M Motors Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(இ7/1843/2023)**

**தீர்மான எண்.1043** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மேயர்
கரூர் மாநகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி